





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# திருப்பல்லாண்டு

*thiruppallAndu*

# திருப்பல்லாண்டு

தனியன்

**ஸ்ரீ நாதமுனிகள் அருளிச்செய்த**

गुरुमुखमनधीत्य प्राह वेदान् अशेषान्
नरपति परिक्लुप्तं शुल्कमादातुकामः ।
श्वशुरं अमरवन्द्यं रङ्गनाथस्य साक्षात्
द्विज कुल तिलकं तं विष्णुचित्तं नमामि ॥

**ஸ்ரீ பாண்டிய பட்டர் அருளிச்செய்தவை**

மின்னார் தடமதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்
முன்னாள் கிழியறுத்தான் என்றுரைத்தோம்
கீழ்மையினில் சேரும் வழியறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று
ஈண்டிய சங்கம் எடுத்தூத
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதஙள் யாமுடைய பற்று

**ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச்செய்த**

*பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு*
*பல கோடி நூறாயிரம்*
*மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா !*
*உன் சேவடி செவ்வி திருக்காப்பு* [1] [0001]

# திருப்பல்லாண்டு

*அடியோமோடும் நின்னோடும்*
*பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு*
*வடிவாய் நின் வல மார்பினில்*
*வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
*வடிவார் சோதி வலத்து உறையும்*
*சுடர் ஆழியும் பல்லாண்டு*
*படைபோர் புக்கு முழங்கும்*
*அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே* [2] [0002]

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல்
வந்து மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட் பட்டு நின்றீர்களை
எங்கள் குழுவினில் புகுதல் ஒட்டோம்
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள்
இராக்கதர்வாழ்
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே [3] [0003]

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து
எங்கள் குழாம் புகுந்து
கூடு மனமுடையீர்கள் வரம் பொழி
வன்தொல்லைக் கூடுமினோ
நாடு நகரமும் நன்கறிய
நமோ நாராயணாயவென்று
பாடு மனமுடைப் பத்தர் உள்ளீர் !
வந்து பல்லாண்டு கூறுமினே [4] [0004]

அண்டக்குலத்துக்கு அதிபதி ஆகி
அசுரர் இராக்கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த
இருடீகேசன் தனக்கு
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது
ஆயிர நாமம் சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே [5] [0005]

# திருப்பல்லாண்டு

எந்தை தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன்
ஏழ்படி கால் தொடங்கி
வந்து வழி வழி ஆட்செய்கின்றோம்
திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி
அரியை அழித்தவனை
பந்தனை தீரப் பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு என்று பாடுதமே [6] [0006]

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி
திகழ் திருச்சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று
குடிகுடி ஆட்செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை
ஆயிரந்தோளும் பொழிகுருதிபாய
சுழற்றிய ஆழி வல்லானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே [7] [0007]

நெய்யிடை நல்லதோர் சோறும்
நியதமும் அத்தாணிச் சேவகமும்
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு
காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து
என்னை வெள்ளுயிராக்க வல்ல
பையுடை நாகப் பகைக் கொடியானுக்குப்
பல்லாண்டு கூறுவனே [8] [0008]

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக்
கலத்ததுண்டு
தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன
சூடுமித் தொண்டர்களோம்
விடுத்த திசைக் கருமம் திருத்தித்
திருவோணத் திருவிழவில்
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே [9] [0009]

# திருப்பல்லாண்டு

எந்நாள் எம்பெருமான்
        உன்தனக்கு அடியோம் என்று எழுத்துப்பட்ட அந்நாளே
அடியோங்கள் அடிக்குடில்
        வீடுபெற்று உயந்ததுகாண்
செந்நாள் தோற்றித்
        திரு மதுரையுள் சிலை குனித்து
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே !
        உன்னைப் பல்லாண்டு கூறுதுமே [10] [0010]

*அல்வழக் கொன்றுமில்லா*
        *அணிகோட்டியர்கோன்*
*அபிமானதுங்கன் செல்வனைப் போலத்*
        *திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன்*
*நல்வகையால் நமோ நாராயணாவென்று*
        *நாமம் பலபரவி*
*பல்வகையாலும் பவித்திரனே !*
        ***உன்னைப் பல்லாண்டு கூறுவனே*** [11] [0011]

*பல்லாண்டென்று பவித்திரனைப்*
        *பரமேட்டியை*
*சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை*
        *வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல்*
*நல்லாண்டென்று நவின்றுரைப்பார்*
        *நமோ நாராயணாயவென்று*
*பல்லாண்டும் பரமாத்மனைச்*
        ***சூழ்ந்து இருந்து ஏத்துவர் பல்லாண்டே*** [12] [0012]